30th March 1966]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரத்தைக் கொடுக்காவிட்டாலும், விவசாயத்திற்கு செலவாகிற மின்சாரக் கட்டணத்தில் பாதியையாவது அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பாதிக்குக் கொஞ்சம் குறைவாக இப்போதே சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறது. யூனிட் ஒன்றுக்கு எல்.டி. ரேட் செலவாவது 14 பைசா விவசாயிகளுக்கு சார்ஜ் செய்வது 8¼ பைசா. இப்போதே பெரிய அளவு சர்க்காரே ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

Copper ore in Kottaipatti area

* 507 Q.—SRI V. SANKARAN :
SRI M. KARUNANITHI : } Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) Whether it is a fact that deposit of copper ore has been discovered in the Kottaipatti Forest area near Harur taluk in Dharmapuri district ; and

(*b*) the detailed result and report of the survey made thereof ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) and (*b*) Evidences of copper mineralisation were noticed by the State Geological Branch in the course of survey for minerals over an area of 250 square miles around Bairanaickenpatti and Kottaipatti in Harur taluk of Dharmapuri district during the latter part of the year 1965. The occurrence was first observed near Bairanaickenpatti at the road junction about 20 miles east of Harur. In view of the favourable geological structures and evidences of mineralisation of the area, it is proposed to recommend the area to the Geological Survey of India for necessary geophysical investigation to know more on the ore minerals.

திரு. வை. சங்கரன் : தோராயமாக எவ்வளவு கிடைக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மதிப்பிடப்படவில்லை.

திரு. ம. கமலநாதன் : தர்மபுரி மாவட்டத்தில் தாமிரம் மட்டுமல்ல ; சுண்ணாம்புக்கல், தங்கப்படிவம் எல்லாம் கிடைக்கும் என்ற அளவுக்குச் சொல்லப்படுகிறது. ஆகவே, ஸ்பெஷல் ஜியலாஜிகல் சர்வே நடத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பிரிலிமினரி ஜியலாஜிகல் சர்வே ஏரியா பூராவும் சென்னை ராஜ்ய சர்க்கார் செய்து கொண்டிருக்கிறது. அதன் பயனாக இந்த விதமான மினரலிசேஷன் இருக்கலாம் என்று கண்டு பிடித்திருக்கிறோம். இப்போதும் அந்தப் பகுதியில் ஸ்டேட் ஜியலாஜிகல் சர்வே நடந்து கொண்டு தான் இருக்கிறது.

[30th March 1966

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தாமிரக் கனி திண்டிவனம் பகுதியில் கிடைப்பதாகச் சொல்கிருர்களே ! உண்மையா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கள்ளக்குறிச்சியிலே கிடைக்கிறது ; திண்டிவனம் பகுதியில் அல்ல.

Laboratories for science subjects

* 508 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any special laboratories for physics, chemistry and other technological subjects are to be set up in the State ; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. வை. சங்கரன் : மற்ற ராஜ்யங்களில் இந்த மாதிரி ஸ்பெஷல் லாபரடாரிஸ் ஏற்படுத்தப்பட்டிருப்பதால் அதிகப் பயன் தருவதாகச் சொல்லப்படுகிறது. அந்த மாதிரி இங்கும் ஏற்படுத்த சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுப்பார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பிற ராஜ்யங்களில் எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கை பற்றி எங்களிடத்தில் தகவல் இல்லை.

தையல் இயந்திரங்கள் வழங்குதல்

* 509 கேள்வி.—திரு. பி. ஜயராஜ் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவில் 1963, 1964, 1964-65 ஆண்டுகளில் அரிசன இலாகாவால் எத்தனை தையல் மிஷின் வழங்கப்பட்டது ?

(இ) அதில் நன்னிலம் தாலூகாவில் கொடுக்கப்பட்டது எத்தனை ?

(உ) அதன் விவரம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் :

	ஆண்டு. (1)	இயந்திரங்களின் எண்ணிக்கை. (2)
(அ)	1962–63	27
	1963–64	27
	1964–65	39
(இ)	1962–63	இல்லை.
	1963–64	3
	1964–65	2